**" கண்ணைக் காப்பது இமை "**
**" மண்ணைக் காப்பது மழை "**
**மதுரை மாநகராட்சி**

# <u>மாமன்றக் கூட்டம்</u>

**2010ம் ஆண்டு ஜீலை திங்கள் 30-ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும் மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின் மாமன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்

---

கூட்டம் நடைபெற நிர்ணயிக்கப்பட்ட நாளிற்கு ஆறு நாட்களுக்கு முன் அலுவலக நேரங்களில் கூட்டம் தொடர்பான ஏடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் கூடத்தில் வைக்கப்பெறும்.

*-*-*-*-*-*

**திருக்குறள் : “அருள்வெஃகி ஆற்றின்கண் நின்றான் பொருள்வெஃகிப் பொல்லாத சூழக் கெடும் ”**

**பொருள் :** அருளை விரும்பி அறநெறியில் நின்றவனும், பிறர் பொருளை கவர விரும்பி தீயவற்றை எண்ணினால் கெட்டுப்போவான். துறவிகளும் மனத்தாலும் பிறர் பொருளை விரும்பக்கூடாது.

**ஆ) தீண்டாமை ஒழிக்க மேற்கொள்ளும்**

## <u>உறுதிமொழி</u>

இந்திய அரசியலமைப்பின்பால். இடைவிடாத. உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான். நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்று எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று, இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும். உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

(அரசாணை (நிலை) எண்.245 செய்தி மற்றும் சுற்றுலாத்துறை நாள் 13.11.98)

**<u>1) ம.ச/19873/2010</u>**

மதுரை மாநகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் மதுரை அமர்வில் தொடரப்பட்டுள்ள வழக்குகளில் மாநகராட்சி சார்பில் விசாரணைக்கு ஆஜராகவும், வாதிடவும், எதிர்வாதுரை தாக்கல் செய்யவும், தக்க சட்ட ஆலோசனைகளை வழங்கவும், மாமன்றத் தீர்மானம் எண்.365 நாள் 31.01.2007–ன்படி (மநி 1/33938/2005) மாநகராட்சி உயர்நீதிமன்ற வழக்கறிஞராக பணியாற்றி வந்த திரு.எம்.சுரேஷ்குமார், உயர்நீதிமன்ற வழக்கறிஞரை வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று 29.06.2010 முதல் மாநகராட்சி வழக்கறிஞர் பதவியிலிருந்து விடுவித்தமைக்கும்,

உயர்நீதிமன்றங்களில் நிலுவையாகவுள்ள வழக்குகளை விரைந்து முடிக்கவும், நிர்வாக நலன் கருதியும், அவசர அவசியத்தைக் கருத்திற்கொண்டும் திரு.எம்.ரவிசங்கர் வழக்கறிஞரிடமிருந்து வரப்பெற்ற 29.06.2010-ந் தேதிய விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று அன்னாரை மதுரை மாநகராட்சி உயர்நீதிமன்ற வழக்கறிஞராக பணியமர்த்தியதற்கும் மாமன்றத்தின் பின்னேற்பை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண்.937</u>**
**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**2) H1/13222/03**

மதுரை மாநகராட்சி மைய சுகாதாரப் பிரிவு இராயலு அய்யர் மகப்பேறுமனையிலுள்ள குடும்ப நல அறுவை சிகிச்சை நிலையத்தில் கருத்தடை அறுவை சிகிச்சை ஒரு மாதத்திற்கு சுமார் 45 முதல் 50 வரை நடைபெறுகிறது.

ஒரு கருத்தடை அறுவை சிகிச்சை செய்த தாய்மார்களுக்கு ரூ.600/- மற்றும் கூடுதலாக (Para Medical Staff) ஒவ்வொரு அறுவை சிகிச்சை செய்யும் ஒவ்வொரு நபருக்கு ரூ.390/- சேர்த்து ரூ.990/- உயர்ந்துள்ளது.

அரசு ஆணை எண்.165 சுகாதாரம் (ம) குடும்ப நலத்துறை நாள் :03.06.08 ஒரு கருத்தடை அறுவை சிகிச்சைக்கு ரூ.1000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது. எனவே தற்போது நிரந்தர முன் பணம் ரூ.20,000-லிருந்து ரூ.50,000/-க்கு உயர்த்தி சம்பந்தப்பட்ட மருத்துவமனை அலுவலருக்கு வழங்க மாமன்ற ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.938**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**3) ம.பொ. 7 / 22465 / 10**

தமிழக அரசின் புராதான நகரங்களை புனரமைப்பு செய்யும் திட்டத்தின் கீழ் சுற்றுலா வளர்ச்சி நிதியின் மூலம் கீழ்கண்ட திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு (அரசாணை எண். 142, நாள். 12.07.10) நிபந்தனைகளின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1) காலியாகவுள்ள மத்திய காய்கறி அங்காடி இடத்தில் வாகன காப்பகம் அமைத்து அடிப்படை வசதிகளுடன் அமைத்தல் | - ரூ. 562.60 இலட்சம். |
| 2) குன்னத்துார் சத்திரத்தில் கடைகள் அமைத்தல் | - ரூ. 232.20 இலட்சம். |
| 3) அருள்மிகு மீனாட்சியம்மன் கோவிலைச் சுற்றிலும் மின்விளக்கு வசதி செய்தல் | - ரூ. 42.56 இலட்சம். |
| 4) மீனாட்சி பூங்காவினை அனைத்து அடிப்படை வசதிகளுடன் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்தல் | - ரூ. 35.24 இலட்சம். |
| 5) பழங்கால நினைவுச் சின்னமான விளக்குத்தூண் புனரமைப்பு செய்தல் | - ரூ. 28.85 இலட்சம். |
| 6) தற்போது தெற்கு மண்டல அலுவலகம் இயங்கி வரும் பழங்கால கோட்டையினை சுற்றிலும் சுற்றுச்சுவர் அமைத்தல் | - ரூ. 75.00 இலட்சம். |
| 7) அருள்மிகு மாரியம்மன் தெப்பக்குளத்தினைச் சுற்றிலும் அழகுபடுத்தும் பணி செய்தல் | - ரூ. 260.00 இலட்சம். |
| 8) நகரின் முக்கிய இடங்களில் சாலைக் குறியீடு மற்றும் நகரின் சிறப்பினை விளக்கும் விளம்பர பலகை அமைத்தல் | - ரூ. 19.00 இலட்சம். |
| **மொத்தம்** | **- ரூ. 1255.45 இலட்சம்.** |

மேற்கண்ட அரசு ஆணையினை மாமன்றத்தின் உரிய பார்வைக்கும் இவ்வாணையின் பேரில் தற்போது நடைமுறையில் உள்ள விலை விகிதத்தில் தயார் செய்யப்படவுள்ள அனைத்து மதிப்பீடுகளுக்கும் உரிய நிர்வாக ஒப்புதலுக்கும் வேண்டி மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .939**

**பொருளில் குறிப்பிட்டுள்ள அரசாணை பதிவு செய்யப்பட்டு குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**(ஒம்...)ஜி.தேன்மொழி**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**மதுரை**
**நாள் : 30.07.2010**

"கண்ணைக் காப்பது இமை"
"மண்ணைக் காப்பது மழை"

# மதுரை மாநகராட்சி

# மாமன்றக் கூட்டம்

**2010ம் ஆண்டு ஜுலை திங்கள் 30-ம் நாள் வெள்ளிகிழமை காலை 12.00 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## அவசரக் கூட்ட நிகழ்ச்சி நிரல்

**1) ம.பொ.7/22314/10**

வார்டு 26 கோமஸ்பாளையம் பகுதியில் BSUP திட்டத்தின் கீழ் அடுக்குமாடி குடியிருப்பு வீடுகள் கட்டப்படவுள்ளன. மேற்படி பகுதியில் உள்ள பழுது அடைந்த சத்துணவுக்கூடம் இரண்டு கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்தி தருமாறு மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

இவ்விடத்தில் தற்போது அமைந்துள்ள தனி வீடுகள் மிகவும் பரப்பளவு குறைவாக உள்ளதால் தொகுப்பு முறையில் கட்ட வேண்டி தீர்மானிக்கப்பட்டு அதன்படியான நடவடிக்கையில் உள்ளன.

இதன்படி மேற்படி கோமஸ்பாளையம் பகுதியில் உள்ள இரண்டு சத்துணவு கூட கட்டிடம் மிகவும் பகுது அடைந்துள்ளதாலும், இந்த இரண்டு மையத்திற்கும் மொத்தம் சுமார் 20 எண்ணிக்கை குழந்தைகளே வருவதாலும், இந்த இரண்டு சத்துணவு கூட கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்தி இந்த இடத்தினை BSUP திட்டத்தின் கீழ் வீடுகள் கட்ட தேவைக்கு உபயோகித்துக்கொள்ளவும், மாமன்ற ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.940**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**2) வமநி 4/4676/09**

மதுரை மாநகராட்சியில் தெற்கு மண்டலம் வார்டு 40ல் துப்புரவு ஊழியராக 12.12.2000 முப முதல் பணிபுரிந்த திரு.K.S.மதியரசு என்பவரை நியமனக்குழு தீர்மானம் எண்.65 நாள்:28.02.2006–ன்படி **(18** நபர்கள்) வடக்கு மண்டலம் வார்டு எண்.19ல் துப்புரவு பணிமேற்பார்வையாளராக பதவி உயர்வு செய்து 06.042006–மு.ப முதல் பணிபுரிந்து வருகிறார். இவரது பதவி உயர்வுக்கு அரசின் பின்னேற்பு வேண்டி கடிதம் அனுப்பப்பட்டு ஆணை இதுவரை பெறப்படவில்லை. இவர் மீது பதவி உயர்வு தொடர்பான கோப்பு நிலுவையில் உள்ளது. தற்போது வகிக்கும் பதவியில் ஊதிய நிர்ணயம் எதுவும் செய்யப்படவில்லை. ஊதிய உயர்வும் வழங்கப்படவில்லை. இவரது பதவி உயர்வின் அடிப்படையில் வகிக்கும் பதவியில் இவர் 31.08.2008-ல் ஓய்வு பெற்றிருக்கவேண்டும். ஓய்வு ஆணை எதுவும் வழங்கப்படவில்லை.

"விதிகளில் இடமில்லாத சமயத்தில் விதியினை தளர்வு செய்யக்கூடாது" என நகராட்சி நிர்வாக இயக்குநர் கடிதம் ந.க.எண்.61440/07 மாநஅ2/நாள்:03.12.2008 –ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் விபரங்களுடன் மேற்படி நியமனக்குழு தீர்மானத்தை ரத்து செய்வதற்கும், முன்பிருந்த துப்புரவு ஊழியர் பணியிடத்தில் திரு.K.S.மதியரசு என்பவரை 31.08.2010பி.ப முதல் ஓய்வுபெற அனுமதிக்கலாம் என்பதற்கும் மாமன்றம் முடிவினை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.941**

**நியமனக்குழு தீர்மானத்தை ரத்துச் செய்தும், துப்புரவு ஊழியர் பணியிடத்தில் 31.08.2010 பிப முதல் ஓய்வுபெற அனுமதி வழங்க மாமன்றம் தீர்மானிக்கிறது.**

**3) B4/15702/10**

மதுரை மாநகராட்சியில் 2009-10, 2010-11ம் ஆண்டுக் கணக்குகள் முடிப்பதற்கு நான்கு மண்டல அலுவலகங்களிலும் உரிய பதிவேடுகள், வங்கி இணக்கச் சான்றுகள் மற்றும் இதரப் பட்டியல்கள் தயார் செய்வதற்கு அனுபவமிக்க பணியாளர்கள் இல்லாததால் மேற்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கும், மாநில கணக்காயரால் (AG Audit ) எழுப்பப்படும் தணிக்கைத் தடைகளை

நீக்கம் செய்ய உரிய பதில் தயார் செய்வதற்கும் பணியாளர்குழு ஊதிய பரிவர்த்தனைகள், ஓய்வூதிய பலன்கள் அனுமதித்தல், வருவாய் இழப்புகளை கண்டறிந்து குறைகளை களைதல், நிர்வாக செலவினங்கள் முறைப்படுத்துதல், பதிவேடுகள் பராமரிப்பை முறைப்படுத்துதல், ஓய்வூதியப் பிரேணையில் எழும் குறைபாடுகளை அவ்வப்போது நிவர்த்திச் செய்து ஆலோசனை வழங்க அனுபவமிக்க ஓய்வுப் பெற்ற தணிக்கை அலுவலரை ஒப்பந்த அடிப்படையில் ஆலோசகராக அமர்த்தவும், அதற்கான மாதந்திர செலவினத் தொகை ரூ10000/- வழங்கவும் அதனை ஓராண்டு காலத்திற்கு வைத்துக்கொள்ளவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண்.942</u>**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**<u>4) ம.பொ. 5 /ம.எண். 914 / 09-10</u>**

மதுரை மாநகராட்சி மணலூர் குடிநீரேற்று நிலையம் மற்றும் மேலக்கால் குடிநீரேற்று நிலையங்களில் 110 KVA ஜெனரேட்டர் மற்றும் 60 HP மோட்டார் பம்பு பொருத்துவதற்கு ரூ.20.00 இலட்சம் மானியமாக இயக்குதல், பராமரித்தல் மற்றும் நிரப்புதல் நிதியுதவியின் கீழ் நகராட்சி நிர்வாக இயக்குநரக கடிதம் எண். ந.க.எண். 39618/09/LA 3, நாள். 24.11.09 அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகைக்கும் இம்மதிப்பீட்டிற்கும் என உரிய ஒப்புதல் கடந்த 27.11.09 அன்று நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. (மாமன்ற தீர்மானம் எண்.827, நாள். 27.11.09) மேற்கண்ட தீர்மானத்தினை ஏற்று 26.04.10 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், தொழில்நுட்ப தகுதி இல்லாத காரணத்தினால் ஒப்பந்தப்புள்ளி இரத்து செய்யப்பட்டது. இரண்டாம் முறையாக கடந்த 29.06.10 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. இவற்றில் கீழ்கண்ட ஒப்பந்தக்காரர்கள் விலைப்புள்ளி கொடுத்துள்ளனர்.

1) M/s. Shriram Engineering Electricals
   No. 356, V.E. Road 1st Floor, Tuticorin.
2) M/s. Sree Amman Traders
   No. 6/17 A Balakrishna Naidu Lane, Middle Street, Annupanady, Madurai.
3) M/s. M.P.M. Brothers
   No. 31-32, Palayam Kottai Road, Tuticorin.

மேற்கண்டவாறு மூன்று ஒப்பந்தக்காரர்களின் தொழில் நுட்ப தகுதியை, தொழில் நுட்ப தகுதிக்கான ஒப்புநோக்கு குழுவின் மூலம் 16.07.10 அன்று பரிசீலனை செய்யப்பட்டதில், தொழில் நுட்ப தகுதி உள்ள கீழ்கண்ட இரண்டு நிறுவனங்கள் விலைப்புள்ளி மட்டும் திறப்பது என்றும் முடிவு செய்யப்பட்டு குழு முடிவின் படி தொழில் நுட்ப தகுதி பெற்றிருந்த M/s. Shriram Engineering Electricals, Tuticorin மற்றும் M/s.M.P.M.Brothers ஆகிய இரண்டு நிறுவனங்களின் விலை விகிதம் திறக்கப்பட்டதில் M/s.Shriram Engineering Electricals என்ற நிறுவனத்தினர் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.28% குறைவாகவும். M/s. MPM Brothers என்ற நிறுவனத்தினர் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.05% குறைவாகவும் கொடுத்துள்ளனர்.

மேற்கண்டவாறு திறக்கப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மிகவும் குறைவாக விலை விகிதம் தெரிவித்துள்ள M/s.Shriram Engineering Electricals நிறுவனத்தாரின் 0.28% குறைவான விலை விகிதத்தினை ஏற்று வேலை உத்திரவு வழங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண். 943</u>**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**<u>5) ம.பொ. 5 /ம.எண். 911 / 09-10</u>**

மதுரை மாநகராட்சி மணலூர் குடிநீரேற்று நிலையம் மற்றும் மேலக்கால் குடிநீரேற்று நிலையங்களில் 500 KVA ஜெனரேட்டர் பொருத்துவதற்கு ரூ.45.00 இலட்சம் மானியமாக இயக்குதல், பராமரித்தல் மற்றும் அபிவிருத்தி நிரப்புதல் நிதியுதவியின் கீழ் நகராட்சி நிர்வாக இயக்குநரக கடிதம் எண். ந.க.எண்.39618/09/LA 3, நாள்.24.11.09 அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகைக்கும் இம்மதிப்பீட்டிற்கும் என உரிய ஒப்புதல் கடந்த 27.11.09 அன்று நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது (மாமன்ற தீர்மானம் எண். 827, நாள். 27.11.09) மேற்கண்ட தீர்மானத்தினை ஏற்று 26.04.10 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், தொழில்நுட்ப தகுதி இல்லாததால் என்பதால் ஒப்பந்தப்புள்ளி இரத்து செய்யப்பட்டது. இரண்டாம் முறையாக கடந்த 29.06.10 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. இவற்றில் கீழ்கண்ட ஒப்பந்தக்காரர்கள் விலைப்புள்ளி கொடுத்துள்ளனர்.

1) M/s. Shriram Engineering Electricals
   No. 356, V.E. Road 1st Floor, Tuticorin.
2) M/s. Sree Amman Traders
   No. 6/17 A Balakrishna Naidu Lane, Middle Street, Annupanady, Madurai.
3) M/s. Salem Trading
   No. 146, Trichy Road, Namakkal.

மேற்கண்டவாறு மூன்று ஒப்பந்தக்காரர்களின் தொழில் நுட்ப தகுதியை, தொழில் நுட்ப தகுதிக்கான ஒப்புநோக்கு குழுவின் மூலம் 16.07.10 அன்று பரிசீலனை செய்யப்பட்டதில், தொழில்

நுட்ப தகுதி உள்ள கீழ்கண்ட இரண்டு நிறுவனங்கள் விலைப்புள்ளி மட்டும் திறப்பது என்றும் முடிவு செய்யப்பட்டு குழு முடிவின் படி தொழில் நுட்ப தகுதி பெற்றிருந்த M/s. Shriram Engineering Electricals, Tuticorin மற்றும் M/s.Salem Trading, Namakkal ஆகிய இரண்டு நிறுவனங்களின் விலை விகிதம் திறக்கப்பட்டதில் M/s.Shriram Engineering Electricals என்ற நிறுவனத்தினர் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.04% குறைவாகவும், M/s. Salem Trading என்ற நிறுவனத்தினர் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.22% குறைவாகவும் கொடுத்துள்ளனர்.

மேற்கண்டவாறு திறக்கப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மிகவும் குறைவாக விலை விகிதம் கொடுத்துள்ள M/s. Salem Trading நிறுவனத்தாரின் 0.22% குறைவான விலை விகிதத்தினை ஏற்று வேலை உத்திரவு வழங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.944**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**6) மதி 1/23051/2010**

மதுரை எல்லீஸ் நகர், சர்வே வார்டு 5, பிளாக் எண் 86, சர்வே எண் 21ன் பகுதி மற்றும் பிளாக் எண் 94 சர்வே எண் 3ன் பகுதி ஆகிய பகுதிகள் மாநகராட்சியால் பராமரிக்கப்படும் சர்வே ஆவணங்களில் மாநகராட்சிக்கு சொந்தமானது என பதிவாகி உள்ளது. இந்த இடம் மனுதாரர் திரு.ஜோசப் ரத்தினசாமிக்கு சொந்தமானது எனவும் நில உரிமை மாற்றம் செய்ய இம்மாநகராட்சியின் தடையில்லா சான்று கோரி மதுரை தெற்கு வட்டாட்சியர் தமது ந.க.எண்15477/2010, நாள்:20.07.2010ல் தமது கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

இந்த இடம் புது எல்லீஸ்நகர் திட்டப் பகுதியில் உத்தேச 70'சாலை மற்றும் பூங்காவிற்கு ஒதுக்கப்பட்ட இடத்தின் ஒரு பகுதியிலும் அமைந்துள்ளதால் மாநகராட்சி ஆணையாளரின் பெயரில் பதிவாகி உள்ளது. இடத்தில் பிரஸ்தாப 70'சாலையோ, பூங்காவோ அமைக்கப்படவில்லை. பிரஸ்தாப உத்தேச சாலை அமைக்கப்படுவதற்கு வாய்ப்பில்லை மேலும் நகர் ஊரமைப்பு சட்டம் 1972ன் பிரிவு 38Bன் பிரகாரம் உத்தேச திட்ட சாலைகளை அமைக்கவோ ஆர்ஜிதபடுத்தவோ மூன்று வருடங்களுக்குள் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காவிட்டால் மேற்படி சாலையை இனிமேல் அமைக்க இயலாத நிலை உள்ளது. மேலும், இந்தப் பகுதி மாநகராட்சிக்கு ஆர்ஜிதம் செய்தோ அல்லது இனாம் சாசனத்தின் மூலமோ ஒப்படைக்கப்படாத நிலமாக உள்ளது. ஆகவே, பிரஸ்தாப நிலத்தில் உத்தேச 70' திட்டசாலை மற்றும் பூங்காவைப் பாதிக்கும் பகுதியும் சர்வே ஆவணங்களில் ஆணையாளர் பெயரில் பதிவாகியும் உள்ள பகுதியுமான TS.No21ன் பகுதியில் 324ச.மீ பகுதிக்கும் TS.No.3ன் பகுதியில் 522ச.மீட்டர் பகுதியை மனுதாருக்கு உரிமை மாற்றம் செய்ய ஆட்சேபணையில்லையென தெரிவிக்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .945**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**(ஒம்..) ஜி. தேன்மொழி**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**நாள் : 30.07.2010.**
**மதுரை.**

* * * * * * * *

**TABLE AGENDA**

**எண். மபொ1/23313/10**

மதுரை மாநகராட்சி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் அலுவலக உபயோகத்திற்காக பயன்படுத்தப்பட்டு வரும் Toyoto Qualis வாகனம் (எண்.TN 29 V 7234) வாங்கி 7 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டதாலும், அடிக்கடி பழுது ஏற்பட்டு முக்கிய பிரமுகர்களின் வாகனத்தை தொடர்ந்து பின்னோக்கி செல்ல இயலாத நிலை ஏற்படுவதால் மேற்கண்ட வாகனத்திற்கு பதில் புதிய Toyota Innova வாகனம் வாங்கி கொடுக்கும்படி வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் 21.07.2010ம் தேதிய கடிதத்தின் மூலம் கோரியுள்ளார்.

வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் உபயோகத்திலுள்ள வாகனத்தில் அடிக்கடி பழுது ஏற்படுவதால் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் கோரிக்கையின்படி புதிய வாகனம் (Toyota Innova)ன் விலை விகிதம் குறித்து மதுரை நகரில் விற்பனைக்கு அங்கீகாரம் பெற்ற M/s. ஆனைமலைஸ் டயோட்டா நிறுவனத்திடம் நேரில் சென்று விபரம் கோரியதில் ஷ வாகனத்தின் விலை (On Road) ரூ.14,03,353/- என தெரிவிக்கப்பட்டது. எனவே வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் அலுவலக உபயோகத்திற்கு Toyoto Innova (8 Seat) புதிய வாகனம் வாங்குவதற்கும், இது சம்பந்தமாக நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு உரிய பிரேரணைகள் அனுப்பி ஒப்புதலை பெறுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ள மாமன்றத்தின் ஒப்புதலைக்கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு

**மாமன்ற தீர்மானம் எண் .946**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**